**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | திருமதி.செல்வரதி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரைமாவட்டம், துள்ளுக்குட்டிநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டு மறுநாள் தான் வந்தேன். அப்போது தான் சொன்னார்கள். எனது அம்மாச்சி அங்கம்மாள் என்பவதை ஆஸ்பத்ரிக்கு கூட்டி சென்றதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1 வது எதிரி சதீஷ் எனக்கு கொழுந்தனார். 2 வது எதிரி பொன்னுமாரி எதிரி 1 வது எதிரியின் அம்மா. 3 வது எதிரி ராமர் 1 வது எதிரியின் அப்பா ஆவார். எனது அம்மாச்சி அங்கம்மாளை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போனார்கள். எதனால் இறந்தார் என்று எனக்குத் தெரியாது. அங்கம்மாள் இறந்த பிறகு தான் நான் சென்று பார்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில், கடந்த 25.01.2020 ம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் எனது வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரில் இருந்த சாக்கடை சுவற்றில் எங்கள் ஊரைச் சேர்ந்த ராமர் மகன் சதீஷ் என்பவர் சாக்கடையை கடந்து போவதற்காக போடப்பட்டிருந்த கல்லின் மீது காலை வைத்திருந்தார் என்றும் அப்போது கடைக்கு சென்றுவிட்டு அவ்வழியாக வந்த சின்னச்சாமி மனைவி அங்கம்மாள் என்பவர் சதீஷை பார்த்து வழிவிடுப்பா என்று சொன்னார் என்றும், அதற்கு சதீஷ் அங்காமளைப் பார்த்து, அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றும், அதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், சத்தம் கேட்டு அங்கம்மாள் கணவர் சின்னச்சாமி அங்கு வந்போது, சதீஷ் என்பவரின் தாயார் மற்றும் தகப்பனார் இருவரும் அங்கு வந்து அங்கம்மாளை பார்த்து அசிங்கமாக பேசி, இவளை விடாதடா, அடிச்சுக் கொல்லுடா என்று சொன்னார் என்றும், அப்போது 1 வது எதிரி சதீஷ் ஓடிச்சென்று அருகில் கிடந்த விறகு கம்பை எடுத்து அங்கம்மாள் பின் தலையில் அடித்தார் என்றும், இதை பார்த்த அங்கம்மாள் கணவர் சின்னச்சாமியும், நானும் மற்றும் அருகில் இருந்த மாரியப்பனும் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், மேற்படி சின்னச்சாமி உயிருக்கு பயந்துகொண்டு, அங்கம்மாளை அவரது கூட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றும், சிறிது நேரம் கழித்து அங்கம்மாள் மயக்கமாகிவிட்டார் என்றும், அவரை உசிலம்பட்டி பாலா மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விப்பட்டேன் என்றும், அதன் பின் அங்கம்மாளை மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு மேலும் அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அங்கம்மாளை மேல்

சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்ததாக கேள்விப்பட்டேன் என்றும் போலிஸ் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | திரு. பொன்னுச்சாமி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2022**

<u>முதல் விசாரணை :</u>

நான் மதுரை, துள்ளுக்குடிநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. நான் காலையில் தோட்டத்திற்கு சென்றுவிட்டு மாலையில் தான் வீட்டிற்கு வருவேன். சண்டை நடந்தது பற்றி எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில், கடந்த 25.01.2020 ம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் எங்கள் ஊரில் உள்ள சமூதாய திருமண மண்டபத்தின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரில் இருந்த சாக்கடை சுவற்றில்

எங்கள் ஊரைச் சேர்ந்த ராமர் மகன் சதீஷ் என்பவர் சாக்கடையை கடந்து போவதற்காக போடப்பட்டிருந்த கல்லின் மீது காலை வைத்திருந்தார் என்றும் அப்போது கடைக்கு சென்றுவிட்டு அவ்வழியாக வந்த சின்னச்சாமி மனைவி அங்கம்மாள் என்பவர் சதீஷை பார்த்து வழிவிடுப்பா என்று சொன்னார் என்றும், அதற்கு சதீஷ் அங்காமளைப் பார்த்து, அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றும், அதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், சத்தம் கேட்டு அங்கம்மாள் கணவர் சின்னச்சாமி அங்கு வந்போது, சதீஷ் என்பவரின் தாயார் மற்றும் தகப்பனார் இருவரும் அங்கு வந்து அங்கம்மாளை பார்த்து அசிங்கமாக பேசி, இவளை விடாதடா, அடிச்சுக் கொல்லுடா என்று சொன்னார் என்றும், அப்போது 1 வது எதிரி சதீஷ் ஓடிச்சென்று அருகில் கிடந்த விறகு கம்பை எடுத்து அங்கம்மாள் பின் தலையில் அடித்தார் என்றும், இதை பார்த்த அங்கம்மாள் கணவர் சின்னச்சாமியும், பிரபு மனைவி செல்வரதி மற்றும் அருகில் இருந்த மாரியப்பனும் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், மேற்படி சின்னச்சாமி உயிருக்கு பயந்துகொண்டு, அங்கம்மாளை அவரது கூட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றும், சிறிது நேரம் கழித்து அங்கம்மாள் மயக்கமாகிவிட்டார் என்றும், அவரை உசிலம்பட்டி பாலா மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விப்பட்டேன் என்றும், அதன் பின் அங்கம்மாளை மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு மேலும் அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அங்கம்மாளை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்ததாக கேள்விப்பட்டேன் என்றும் இந்நிலையில் சிகிச்சையில் இருந்த அங்கம்மாள் 28.01.2020 ம் தேதி காலை சிகிச்சை பலன் இன்றி

இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன் என்றும் போலிஸ் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை